ராணி
காமிக்ஸ்
ரூ. 5
தீபாவளி மலர்
ஜேம்ஸ்பாண்டு 007
அதிரடி தாக்குதல்
சூப்பர் டூப்பர்
வண்ணப் படக்கதை
GUNA KARUR

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

ராணி காமிக்ஸ் –489
(மாதம் இருமுறை இதழ்)

நவம்பர் 1, 2004.

ஜேம்ஸ்பாண்டு 007ன் தடாலடி

சூப்பர் டூப்பர்

(ரூ – 1

ராணி காமிக்ஸ் –489
(மாதம் இருமுறை இதழ்)

நவம்பர் 1, 2004.

ஜேம்ஸ்பாண்டு 007-ன் தடாலடி



சூப்பர் டூப்பர்

(ரூ – 1

மங்கோலியாவில் ஒரு கோட்டை. கடுமையான காவல்.
லண்டன் உளவாளி வந்துகொண்டிருப்பதாகத் தகவல். கவனம்!
பின்பக்கமாக ஜேம்ஸ்பாண்டு நுழைந்தார்!
வரட்டும், ஒரே வெட்டு!

இங்கேயும் காவல்
இருக்கக்கூடும்!
வந்துட்டியா?
ஜேம்ஸ் மின்னல் வேகத்தில்
படார்!


முகமூடி எதுக்கு?

நீ ஜெசிதானே?
நீங்கள்?

ஜேம்ஸ்பாண்டு!
என்ன, இங்கே
திடீர் என்று?

உன்னிடம் தனியே பேச வேண்டும்!
அதோ லண்டன் உளவாளி!
நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
டுமீல்!
அங்கே ஒருவழி இருக்கிறது, ஓடிவாங்க!

இருவரும் தப்பினார்கள்.
சீக்கிரம் வாங்க!

காவல் நாய் பாய்ந்தது!
போலீசார் வருகிறார்கள்!

ஒரே வெட்டு!
ஜெசி! ஓடு!

இருவரும் ஒரு ஓட்டலுக்கு வந்து சேர்ந்தார்கள். ஜெசியும் ஒரு உளவாளிதான்.
அய்வர் இப்போது எங்கே இருக்கிறார்?
தர்கிஸ்தானில் இருப்பதாகக் கேள்வி.
அவருடைய மனைவி லண்டனில்தான் இருக்கிறாள்!
அவளை அழைத்துப்போனால், அய்வரை எளிதில் சந்திக்கலாமே?

அவளைப் பிடிக்க மங்கோலியா சில உள்வாளிகளை நியமித்திருக்கிறது!
நான் கிளம்புகிறேன்.
ஏதாவது புதிய தகவல் இருந்தால், நான் தலைமை நிலையத்துக்குத் தெரிவிக்கிறேன்!
ஜேம்ஸ்பாண்டு லண்டனுக்குத் திரும்பினார்.
அய்வர் தர்கிஸ்தானில் இருப்பது இப்போது உறுதியாகி விட்டது.
அவர் ஆங்கிலேயர். அவரை மீட்டு வரவேண்டும்,. இல்லையா?
அவர் மனைவி ஒரு மங்கோலியப் பெண். அவளது உதவியிருந்தால், தர்கிஸ் தானுக்குள் எளிதாக நுழைந்து விடலாம்.

அந்தப் பெண்மணி இப்போது லண்டனில்தான் இருக்கிறாள்!
அய்வர் எதுக்கு தர்கிஸ்தானுக்குப் போனார்?
அவர் ஓய்வுபெற்ற இராணுவ என்ஜினீயர். தர்கிஸ்தானியர் விடுதலைப் போர் நடத்துகிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்குப் போனார்.
அவரைக் கொலை செய்ய மங்கோலியா முயலுவதாக நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.
எனவே, அவரை மீட்க வேண்டும்!
முதலில் அவளை சந்திக்கிறேன்!
அய்வரின் மனைவி பெயர், தெக்கலா. இது அவளது முகவரி. அவளையும் அழைத்துப் போனால், தர்கிஸ்தானில் நுழைந்துவிடலாம்!

தெக்கலாவுக்கு ஜேம்ஸ் போன் செய்தார்.
நான் ஜேம்ஸ்பாண்டு 007. உங்கள் கணவரை மீட்பது பற்றி உங்களுடன் பேசவேண்டும்!
இப்போதுகூட என் வீட்டு முன் ஒரு கார் நிற்கிறது!
என்னை உளவாளிகள் கண்காணிக்கிறார்கள்.
ஜேம்ஸ்பாண்டு விரைந்து வந்தார்.
இன்னும் கார் நிற்கிறதே?
இவருக்கு என்ன ஆயிற்று?

ஆ! கொலை! இவர் போலீஸ் அதிகாரி அல்லவா?
தெக்கலாவுக்கு ஏதாவது...
உள்ளே எதிரி இருக்கக்கூடும்!
வீட்டை சூறையாடியிருக்கிறார்களே!
திடீர் என்று...


ஒரு பெண்ணா இத்தனையும் செய்தது!
இவளை விடக்கூடாது! மடக்க வேண்டும்!
வில்லியம் சார்! தெக்கலா வீட்டில் ஒரு பெண்ணைப் பிடித்திருக்கிறேன்!
அவளை விசாரிக்க வேண்டும். நீங்கள் வருகிறீர்களா?

வில்லியம் வந்து விசாரணை நடத்தினார்.
யார் நீ?
நடனக்காரி! கலைக் குழுவில் லண்டனுக்கு வந்திருக்கிறேன்!
ஆடவந்தவள், உளவு பார்க்கிறாயா?
ஜேம்ஸ்! உனக்கு குப்ளேகானைத் தெரியுமா?
மாபெரும் மங்கோலிய வீரன்! அவனுக்கு இப்போது என்ன?
நான் சொல்லுவது இன்னொரு குப்ளேகான். இவனும் மங்கோலியன்தான். இப்போது லண்டனுக்கு வந்திருக்கிறான்.
பத்திரிகைகளில் பார்த்தேன். கலைக்குழு தலைவன்தானே?
அந்தக் குழுவில் வந்தவள்தான், இவள்!

இவர்கள் இங்கே கலைநிகழ்ச்சி நடத்த வரவில்லை. உளவு பார்க்க வந்திருக்கிறார்கள் !
தெக்கலா எங்கே?
குப்ளேகான் வீட்டி இருக்கிறாள்
அவளை போலீசில் ஒப்படைத்தார்கள் !
போலீஸ் அதிகாரியைக் கொன்றதும் இவளாகத் தான் இருக்க வேண்டும் !
தெக்கலாவைக் கடத்த உளவாளிகள் முயற்சி செய்த தகவல் கிடைத்தது அவளைப் பாதுகாக்க அனுப்பப்பட்ட போலீஸ் அதிகாரி, அவர் !
குப்ளேகான் மாளிகைக்கு ஜேம்ஸ்பாண்டு விரைந்தார்.
தெக்கலாவை கடத்திப் போகுமுன் காப்பாற்றியாக வேண்டும் !

காவலாளியே இல்லையே!
திடீர் என்று...
நில்!
ஓ! செடி கொடிகள் இடையே மறைந்து நிற்கும் காவலாளி!
உன் துப்பாக்கியைக் கீழே போடு!
ஆ! நெஞ்சு வலிக்கிறது!
ஜேம்ஸ் சுருண்டு விழுந்தார்!
திடீர் மாரடைப்பா?

அருகே போனதும்...
ஆ!
இன்னொன்று வேண்டுமா?
தொடாதே!
இந்தா வாங்கிக்கொள்!

மயங்கி வழுந்தான!
துப்பாக்கி பயன்படும்!
கண்ணாடி ஜன்னல் வழியே பார்த்தார்!
ஒரு பெண்ணைக் கட்டித் தொங்க விட்டிருக்கிறார்களே! யார் அவள்? தெக்கலாவா?
அந்த அறைக்குள் ஒருவன் வந்தான்!
என்ன, இப்போதாவது உண்மையைச் சொல்லுகிறாயா?

இல்லையென்றால் இப்படியே நீ தொங்கவேண்டியதுதான்! யாரும் வந்து உன்னை மீட்கப் போவதில்லை!
ஜேம்ஸ் வந்தார்.
நான் வந்து விட்டேன்!
யாரடா, நீ? எப்படி என் மாளிகைக்குள் நுழைந்தாய்?
நான் நுழைய முடியாத இடமே கிடையாது! இரும்புக் கோட்டையைக் கூடத் தகர்ப்பேன்!

அந்தப் பெண்ணை மீட்டுப் போக வந்திருக்கிறேன்!
இவள் யார் தெரியுமா?
தெக்கலாதானே? முதலில் அவள் கட்டுகளை அவிழ்த்துவிடு!
நான் அவளுக்கு நடனப் பயிற்சி அளிக்கிறேன். அதன் ஒரு பகுதிதான், இது!
நீ யார் என்பது எனக்குத் தெரியும்!
அவர் சொல்லுவது உண்மைதான்!

நான் ஒரு கலைக்குழுவின் தலைவன். நீ இங்கே வந்து அடாவடித்தனம் செய்வது சரியல்ல!
நான் ஒரு இரகசியப் போலீஸ்! எல்லாம் தெரிந்தே இங்கே வந்தேன்! தெக்கலாவை அழைத்துப் போகிறேன்!
இருவரும் வெளியே வந்தார்கள்
தெக்கலா! அவனுக்கு ஆதரவாக ஏன் பேசினாய்?
இல்லையென்றால் என் கணவரைக் கொன்றுவிடுவார்கள்!
என் கணவரின் உயிருக்கு ஆபத்து வந்துவிடக்கூடாதே என்று அஞ்சுகிறேன்!
தலைமை நிலையத்துக்கு வந்தார்கள்.
நான் மகிழ்ச்சியுடன் எல்லா உதவியும் செய்கிறேன்!
உன் கணவரை மீட்கும் பொறுப்பு ஜேம்ஸ்பாண்டிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு உன் ஒத்துழைப்பு தேவை!

உன்னைப் பணயமாக வைத்து உன் கணவரைப் பிடிக்க முயற்சி நடக்கிறது!
அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுமுன் அவரை மீட்டுத் தாருங்கள்!
உன் கணவர் தர்கிஸ்தானில் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறார்!
எதிரிகள் அவரைப் பிடிக்க நாலாபுறமும் முயற்சி செய்கிறார்கள்!
இதனால் யாரையும் நம்பும் நிலையில் அவர் இல்லை!
இவர் உண்மையாகவே அவரை மீட்க வந்தவர் என்பதை நீ சொல்ல வேண்டும்!
மனைவியான நீ சொன்னால், அவர் நம்புவார்!
இதற்காக இவருடன் நீ தர்கிஸ்தான் போகவேண்டும்!
என் கணவரை மீட்க மங்கோலியாவுக்குப் போகக்கூட நான் தயார்!

உன் வீட்டில் போய் இரு!
பயண ஏற்பாடு முடிந்ததும், நானே உன்னை அழைக்க வருகிறேன்!
தர்கிஸ்தான் எல்லையில் கடுமையான காவல் இருக்குமே?
நமது சூப்பர் டுப்பரைப் பயன்படுத்து!
அதை ஓட்டுவதில் எனக்குப் பயிற்சி இல்லையே?
பயிற்சி பெற்ற வீரர் ஒருவர் உன்னுடன் வருவ
பயண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது, தெக்கலா ஜேம்சுக்கு போன் செய்தாள்!
வாங்க ஜேம்ஸ்! உங்களுக்கு ஒரு விருந்து காத்திருக்கிறது!
நாம் இருவரும் வெளியே போகிறோமா?
என் உடையைப் பார்த்துக் கேட்கிறீர்களா?

விருந்து இங்கேதான்! முதலில் இதைக் குடியுங்கள்!
கொஞ்சம் விலகி நில்லுங்கள்! நீங்கள் இன்னொருவர் மனைவி!!
அவர் ஒரு நாளும் என்னிடம் கணவராக நடந்து கொண்டதில்லை!
அவருக்கு எப்போதும் வேலை... வேலை... வேலைதான்! இப்போது தர்கிஸ்தானில் போய் மாட்டிக்கொண்டார்!

ஆனால், என் மீது அவருக்கு மிகுந்த காதல்! அதனால்தான் நானும் அவரை நேசிக்கிறேன்!
ஆனாலும் நானும் ஒரு பெண். எனக்கும் உணர்ச்சிகள் உள்ளன!
அதுதான் உங்களை விருந்துக்கு அழைத்தேன்!
விலகிப்போ! உன் பேச்சு, செயல் எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை!

அவளைத் தள்ளிவிட்டு, வில்லியம் வீட்டுக்கு ஜேம்ஸ்பாண்டு வந்தார்!
என்ன ஜேம்ஸ், இந்நேரம் இங்கே வந்திருக்கிறாய்?
தெக்கலா பற்றித்தான்!
தெக்கலாவை அழைத்துப் போகவேண்டுமா?
ஏன், ஏதும் சிக்கலா?
தெக்கலா என்னை வீட்டுக்கு அழைத்தாள். அங்கு அவள் நடந்துகொண்டமுறை அவ்வளவு சரியாக இல்லை.
தெக்கலாவின் போக்கு நமது வேலைக்கு வேட்டு வைக்கலாம்!
நமக்கு வேலைதான் முக்கியம் ஜேம்ஸ்! நீ அவளை அனுசரித்துப்போ!

அவள் அடுத்தவர் மனைவி!
பயண ஏற்பாடு எல்லாம் முடிந்துவிட்டது. இப்போது அவளை வெட்டிவிட முடியாது. எப்படியாவது சமாளித்துக்கொள்!
இரண்டு நாளில்...
ஜேம்ஸ்! எல்லாம் தயார். நீங்கள் புறப்படலாம்! முதலில் விமானப் பயணம்! பிறகு சூப்பர் டுப்பர்!
விமானத்தில் ஏறினார்கள்!
அது என்ன சூப்பர் டுப்பர், ஜேம்ஸ்!
சொல்லுகிறேன்

விமானம் இறங்கியது.
இங்கே இருந்து சூப்பர் டூப்பர் பயணமா?
கொஞ்சம் பொறு!
ப்போது எங்கே ந்திருக்கிறோம்?
இதுதான் ஆப்கான் எல்லை!
ந்த எல்லை தாண்டிப் போனால், தர்கிஸ்தான்!
மிகவும் நன்றி, கேப்டன்!

எல்லை தாண்டிவிட்டோம். இனி?
உன் கணவர் இருக்கும் இடத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்!
அலோ... அலோ... தர்கிஸ்தான் விடுதலைப் படையா?
தொடர்பு கிடைக்கிறதா?
ஒரு குரல் சன்னமாக் கேட்கிறது!
ஒரு பெண்ணின் குரல் கேட்கிறது! தெக்கலா! நீ பேசு!

அலோ... நான் தெக்கலா பேசுகிறேன்... கேட்கிறதா?
யார்... தெக்கலாவா?
ஆமாம்! அய்வர் என்னை நம்பவேண்டும் அல்லவா? அதுதான் அவர் மனைவியை அழைத்து வந்தேன்!
ங்கே வரச்சொல்லுகிறார்கள்?
மலைத் தொடரைக் கடக்க வேண்டும்!
வரைபடத்தை விரியுங்கள்! நீங்கள் வரவேண்டிய இடத்தைச் சொல்லுகிறேன்!
அதற்குத்தான் இந்த சூப்பர் டுப்பரா?

ஆமாம். இது அணுசக்தியால் இயங்கக்கூடியது. பூமியைத் துளைத்துக் கொண்டு போகும்!
இதை நிர்மாணித்த என்ஜினியரே இதை ஓட்டிவருவார்!
நீ தைரியமாக இரு!
கதவை மூடிக்கொள்!
கிளம்பச் சொல்லுங்கள்!
மண்ணைப் பிளந்துகொண்டு சூப்பர் டுப்பர் போயிற்று!
பல மணி நேரப் பயணம். மலையைக் கடந்து சூப்பர் டுப்பர் மேலே வந்தது.

சரியான இடத்துக்குத்தானே வந்திருக்கிறோம்?
ஆமாம்!
அசையாதே! சுட்டுவிடுவேன்!!
யார் இவள்? நம்முடன் பேசியவளாக இருக்கக்கூடும்!
துப்பாக்கி இருந்தால் கீழே போடுங்கள்! யார் நீங்கள்? இங்கே எப்படி வந்தீர்கள்? எதற்கு வந்தீர்கள்?

கம்பியில்லாத் தந்தியில் எங்களுடன் பேசியது நீதானே? நான் திருமதி அய்வர்!
நான் அவரை மீட்க வந்திருப்பவன்! நீ யார் என்று தெரிந்துகொள்ளலாமா?
என் பெயர் ரீட்டா. உங்கள் பெயர்?
ஜேம்ஸ்பாண்டு— இங்கிலாந்து இரகசியப் போலீஸ் உளவாளி.
நீங்கள் இங்கு வரும் செய்தி முன்பே எங்களுக்கு வந்துவிட்டது!
மிஸ் ரீட்டா! நான் என் கணவரைப் பார்க்கவேண்டும்

நானும்தான்!
அவரைப் பார்ப்பது அவ்வளவு எளிது அல்ல!
அவர் எங்கே இருக்கிறார்?
மங்கோலிய உளவாளிகள் அவரைக் கடத்திப் போகப் பருந்துபோலப் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர் பாதுகாப்பான இரகசிய இடத்தில் இருக்கிறார். அவரது பாதுகாப்பு அதிகாரி நான்!
எங்கள் மீது உனக்கு நம்பிக்கைதானே?

உங்களை நம்புகிறேன். ஆனால்... கொஞ்சம் ஏமாந்தால், கண் இமைக்கும் நேரத்தில் மங்கோலிய உளவாளிகள் அய்வரைக் கொத்திக்கொண்டு போய்விடுவார்கள்!
சரி, இப்போது நாம் என்ன செய்யலாம்?
நீங்கள் வந்த வண்டியிலேயே பதுங்கிவிடுங்கள். இரவில் அய்வரை சந்திக்கப் போகலாம்! அதுவரை எச்சரிக்கையாக இருங்கள்.
உளவாளிகள் கண்கொத்திப் பாம்புபோலப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் நான் இரவில் வருகிறேன்!
நாங்கள் பாதுகாப்பாக இருப்போம்.

இரவு வந்தது.
நீங்கள் சூப்பர் டுப்பருக்குக் காவலாக இருங்கள்!
நீங்கள் இருவரும் என்னோடு வாருங்கள்!
நீங்கள் இருவரும் தர்கிஸ்தான் உடையை அணிந்து கொள்ளுங்கள்!
இந்த உடை எனக்குப் பிடிக்கவில்லை!


அதுதான் பாதுகாப்புக்கு ஏற்றது!
நாம் போகலாமா?
உங்களுக்காகக் குதிரைகள் தயாராக இருக்கின்றன!
என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்!
இவளிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

சிறிது தூரத்தில் ஒரு மலை மீது...
எதிரியா? நண்பனா?
நண்பன்தான்! எங்கள் காவலாளி!
மலைக்குப் பின்புறம் நாம் போகவேண்டும்! எங்கள் காவலைக் கடந்து வேறு யாரும் வர முடியாது!

பாதுகாப்புக் கூடாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.
தெக்கலா! என் கண்ணே! உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாகிவிட்டது!
நீங்கள்தானே அய்வர்?
நீங்கள்?
நான் ஜேம்ஸ்பாண்டு 007. லண்டனிலிருந்து வந்திருக்கும் உளவாளி!

என் கணவருடன் ஓய்வு எடுக்க நான் விரும்புகிறேன்!
ஜேம்ஸ்! நீங்களும் ஓய்வு எடுங்கள்!
மிகவும் நன்றி. ஆனால், பொழுது விடியுமுன் நாம் புறப்பட்டுவிடவேண்டும்!

ஜேம்ஸ் புறப்பட்டபோது...
ஜேம்ஸ்! இங்கே வாங்க!
இது யார் கூடாரம்?
என் கூடாரம்தா
பரவாயில்லை, வாங்
சிறிது நேரத்தில்
ரீட்டா...
என்ன விசயம்?
மலைக்கு அப்பால் எதிரிகள் நடமாடுகிறார்கள்!

சரியான நேரத்தில்தான் நான் வந்திருக்கிறேன்!
எல்லோரையும் எச்சரிக்கை செய்!
தலைவரே! நீங்கள் முதலில் தப்பிவிடுங்கள்!
இல்லை! மக்களைக் காக்க நான் முதல் பலி ஆவேன்!
ரீட்டா சொல்லுகிறபடி செய்யுங்க! இல்லை! நான் உங்களைக் கடத்திப் போவேன்!
ஜேம்ஸ்! உன் அதிரடி வேலை இங்கே நடக்காது! தர்கிஸ்தான் மக்கள் என்னைக் காப்பார்கள்!

உங்கள் இரண்டு பேருக்குமே சாவுதான்!
எப்படிச் சொல்லுகிறாய்?
இந்த முகாம் எதிரிகள் கையில் விழப்போகிறது!
உறுதியாகச் சொல்லுகிறாயா?
ஆமாம்!
எப்படி இவ்வள் உறுதியாகச் சொல்லுகிறா
என் கழுத்தில் கிடக்கும் பதக்கத்தி 'பீப்... பீப்...' சத்தம் கேட்டுக்கொண் இருக்கிறது! இது இரகசிய வானொல கருவி!

துரோக நாயே! என்னைக் காட்டிக்கொடுக்கத்தான் இங்கே வந்தாயா?
மங்கோலிய உளவாளிகளுடன் இவருக்குத் தொடர்பு இருக்கிறது என்பது ஏற்கனவே நான் சந்தேகப்பட்டதுதான்!

மங்கோலியப்படை வேகமாக முன்னேறி வருகிறது!

அடி சதிகாரி!
அய்வர்! பேச நேரமில்லை! உடனே நாம் தப்பிக்கவேண்டும்!
குதிரைகள் தயாராக இருக்கின்றன! ஓடி வாருங்கள்!
அதற்குள் மங்கோலியப்படை வந்துவிட்டது!
அப்படியே நில்லுங்கள்!

ஓ! குப்ளே கான்!
லண்டனில் இருந்த மங்கோலிய ஒற்றன்!
லண்டனில் சந்தித்தபின் மீண்டும் இங்கே சந்திக்கிறோம், ஜேம்ஸ்!
நான் இங்கே வந்தது உனக்கு எப்படித் தெரியும்?
அதுதான் தெக்கலா இருக்கிறாளே!
உன்னால் தர்கிஸ்தான் மக்களைக் காப்பாற்ற முடியாது!
தர்கிஸ்தான் மக்கள் மங்கோலியாவுக்கு அடிபணியமாட்டார்கள்!

உன் மனைவியையே உன்னால் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லையே! அவள் என் கைப் பாவை!
என்ன இருந்தாலும் அவள் ஒரு மங்கோலியப் பெண்தானே!
குப்ளேகான் இங்கே வர நேரம் கொடுக்கவே தெக்கலா என்னிடம் காதல் நாடகம் ஆடியிருக்கிறாள்!
ஜேம்ஸ்! லண்டனில் என் வீட்டில் நடந்த தாக்குதல், குப்ளேகான் வீட்டில் நீங்கள் என்னைப் பார்த்தவிதம் எல்லாமே நாடகம்தான்!
தெக்கலா அய்வரின் மனைவி ஆனதுகூட ஒரு நாடகம்தான்!

எங்களை மங்கோலியாவுக்கு கொண்டுபோகப் போகிறாயா?
உங்களை மட்டுமல்ல; நீ வந்த சூப்பர் டுப்பரையும் மங்கோலியாவுக்குக் கொண்டுபோவேன்!
தெக்கலா கண்ணே! வா! நாம் சூப்பர் டுப்பர் நிற்கும் இடத்துக்குப் போவோம்!
அது எங்கே போய்விடும்?
ஜேம்ஸ்பாண்டு, அய்வர் இருவரும் கால் கை கட்டப்பட்டு தரையில் உருட்டிவிடப்பட்டார்கள்!
தளபதி குப்ளேகான் வரும்வரை இப்படியே கிடங்கள்!

நீ காவல் இருக்கிறாயா?
சரி. நீ சற்று நேரம் தூங்கு!
சிறிது நேரத்தில் ரீட்டா அங்கே வந்தாள்.
ஏய்!
யார் நீ? இங்கே ஏன் வந்தாய்?
வீரர்களை சந்தோசப்படுத்துகிறவள் நான்!
நான் அழகாக இருக்கிறேனா?
இப்படி ஒரு அழகை நான் பார்த்தது இல்லை!
கொஞ்சம் பொறு! என் காவல் நேரம் முடியட்டும்!!
அதற்குள் விடிந்துவிடும்! வா!

உள்ளே இரு கைதிகளைக் கட்டிப் போட்டிருக்கிறேன்!
கட்டிப் போட்டிருக்கிறாய் அல்லவா? அவர்களால் தப்பிக்க முடியாது! நீ வா மன்மதா!
இரண்டு பேரும் பெரிய கில்லாடிகள்!
அப்படியானால் நாமும் கூடாரத்துள் போய்விடுவோம்!
நல்ல யோசனை! உள்ளே வா!!
! முகத்தைத்
ள்ளுங்கள்!
அழகியே! இனி நம் வேலையைப் பார்ப்போமா?

இதோ!
அவன் வயிற்றில் கத்தியைப் பாய்ச்சினாள்!
ஆ!
அவன் வாயில் துணியை அடைத்தாள்!
சத்தமில்லாமல் செத்துத் தொலை!
கட்டுகளை அறுத்தாள்!
ரீட்டா! நீ பலே கில்லாடி!
வாங்க! குதிரைகள் தயாராக இருக்கின்றன!
காவலாளிகள் இருப்பார்களே?

சீக்கிரம் அய்வர்! வாங்க!
தெக்கலாவைக் கடத்திப் போய்ப் பழிவாங்க வேண்டும்!
அதற்கு இப்போது நேரமில்லை! முதலில் நாம் தப்பிக்க வேண்டும்!!
தெக்கலா குப்ளேகானுடன் போயிருக்கிறாள்!
நாமும் போவோம்!
குதிரைகளுக்கு ஒருவன் காவல் இருக்கிறானே?
ரீட்டா! உன் கத்தியை என்னிடம் கொடு!
பேச்சுக் குரல் கேட்டு, மங்கோலிய வீரன் எழுந்தான்!
யாரது?

ஜேம்ஸ் மின்னல் வேகத்தில் கத்தியை வீசினார்!
சர்...
ஆ!
அவனது துப்பாக்கியை ஜேம்ஸ் எடுத்துக் கொண்டார்.
இது எனக்கு வேண்டும்!
சூப்பர் டுப்பர் நிற்கு இடத்துக்கு விரைந்து போக வேண்டும்!
மூவரும் குதிரையில் ஏறிக்கொண்டார்கள்!
வேகமா வாங்க!
குதிரைகளின் குழம்பொலி கேட்டு ஒரு மங்கோலிய வீரன் எழுந்தான்.

டுமீல்!
ஜேம்ஸ் பதிலடி கொடுத்தார்!
ஆ!
துப்பாக்கி சத்தம் கேட்டு தெக்கலா, குப்ளேகான் விழித்துக்கொண்டார்கள்.
ஜேம்ஸ்பாண்டு தப்பிவிட்டான் என்று நினைக்கிறேன்!
துப்பாக்கி சத்தம்!

குப்ளேகான் வெளியே வந்தான்.
முட்டாளே! என்ன நடந்தது!
இரண்டு கைதிகளும் எப்படியோ தப்பி விட்டார்கள்!
அவர்கள் சூப்பர் டுப்பருக்குத்தான் போவார்கள்!
அதற்குள் அவர்களைப் பிடிக்க வேண்டும்
நானும் வருகிறேன்! வேகமாகக் கிளம்பு!
ஜேம்ஸ்! குப்ளேகான் பின்தொடர்ந்து வருகிறான்!
ஏதாவது குறுக்கு வழி இருக்கா ரீட்டா?

தப் பக்கம் ஒரு
வழி இருக்கிறது.
தை யாரும்
ன்படுத்துவது
ல்லை!
நாம் பயன்
டுத்தலாம்!
பாறைகளுக்கு இடையே ஒரு குறுகலான வழி, இது.இது நமக்குப் பாதுகாப்பான பாதை!
ரிடத்தில் ஜேம்ஸ்பாண்டு
ன்றார்.
நீங்கள் இருவரும் போங்கள்!
ஜேம்ஸ்... நீங்க?
நான் சொல்லுகிறபடி செய்!
தப்ளேகானின் படை பின்னே வந்தது!
வெகுதூரம் போயிருக்க முடியாது!

பாறைகளின் பக்கம் வந்தபோது—
டுமீல்!
குப்ளேகானின் படை திருப்பிச் சுட்டது!
டுமீல்...
ஜேம்ஸ் மலை மீது இருந்ததால் சுடுவது எளிதாக இருந்தது!
குண்டுமாரி பொழிகிறானே!

ஜீப்பில் வந்த அத்தனை பேரும் குண்டுபட்டு செத்தார்கள்!
டுமீல்!
ஜீப்பின் பெட்ரோல் டேங்கில் குண்டு பாய அது தீப்பிடித்தது.
ஆபத்து!
என்ன ஆச்சு?
முன்னே போன ஜீப் தீப்பிடித்து எரிகிறது!
அவர்கள் முந்திவிட்டால், சூப்பர் டுப்பரில் தப்பி விடுவார்கள்!
வாயை மூடு!

எதிரி தப்பிவிடக்கூடாது புறப்படுங்கள்!!
இதற்குள் ஜேம்ஸ்பாண்டு விரைந்து மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டார்.
என்ன நடந்தது?
வேகமாகப் போங்கள்! பேச நேரமில்லை!!
எதிரிகள் பின்தொடர்ந்து வருகிறார்களா?
தொடர வழியில்லை! பின்னே போய் வேறு வழியில் வருவார்கள்!
அதற்குள் நாம் தப்பிவிடலாம்!

அதோ நமது சூப்பர் டூப்பர்!
சூப்பர் டூப்பர் தயார் நிலையில் இருக்கிறது. வேகமாக ஏறுங்க!
ஜேம்ஸ்! அதோ பாருங்க!!
குப்ளேகான்தான் வருகிறான்!

தெக்கலா வரவில்லையா?
அவள் ஒரு மோசக்காரி!
உடனே புறப்படுங்கள்! அவர்கள் சுடக்கூடும்!!
நாம் முந்திக்கொள்ளலாம்! தாக்குதல் நடத்தவும் இதில் வசதி இருக்கிறது!
முதலில் நாம் தப்பிக்கவேண்டும் ஜேம்ஸ்!
நிச்சயம் தப்பிவிடலாம்! நீங்கள் லேசர் கதிரைப் பாய்ச்சுங்க!

சூப்பர் டுப்பரிலிருந்து லேசர் கதிர் பாய்ந்தது!
சர்...ர்...
லேசர் தாக்கி, குப்ளேகான் படைகள் தூள் பறந்தன!
டமார் டுமார்..
படார்
எதிரிகள் ஒழிந்தார்களா?
எல்லோரும் எமலோகம் போய்விட்டார்கள்!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. சுல்யாண சுந்தரம் ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

சூப்பர் ஹீரோ கிட் அதிரடி!

கில்லாடிக்குக் கில்லாடி

மாவீரன் கிட், செல்சியா என்ற பெண்ணுடன் காட்டுப்பாதையில் போய்கொண்டிருந்தான். அப்போது ஒரு பெரிய மரத்தை சிலர் வெட்டி சாய்த்தனர்.

செல்சியா! அந்த ஆள் மீது மரம் விழுந்துவிட்டது!! வா காப்பாற்றலாம்!
மரத்தை வெட்டியவர்கள் எச்சரிக்கை ஏதும் செய்யவில்லையே, ஏன்?
ஏதோ சதி நடந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.
கிட்டும், செல்சியாவும் அருகே சென்று பார்த்தனர்.
மரத்துக்கு கீழே சிக்கி அவர் உயிருக்குப் போராடுகிறாரே!

இதோ சில நொடிகளில் அவரைக் காப்பாற்றி விடலாம், அன்பே!
பள்ளத்தில் விழுந்ததால் உங்கள் மீது மரம் விழாமல் தப்பித்தீர்கள்!
அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கிறது என்று நினைக்கிறேன்
ணத்திலிருந்து விடுபட்ட அவர்...
உங்களுக்கு நன்றி! நீங்கள் மிஸ்டர் கிட்தானே? என் பெயர் டொமினிக். என்னை கொலை செய்ய நடந்த முயற்சிதான், இது!
இது யார் செய்த சதி?

எனக்குத் தொழில் ரீதியாக ஒரு எதிரி இருக்கிறான். அவன் பெயர் மார்லின். என் பழைய கூட்டாளி.
கொலை வழக்கில் கைது செய்யப்பட்டானே மார்லின் அவனா?
ஆம்! கொலைக்கு சாட்சி இல்லாததால் விடுதலையாகிவிட்டான்!
உடல் பலசாலியான அவனை எதிர்க்க யாருக்கும் துணிச்சல் இல்லை!!
அவனை அப்படி விட்டுவிடக்கூடாது!.
பேய்க்கு மட்டும் பயப்படுவான்!
நீங்கள் காயம் அடைந்தது மாதிரி நடியுங்கள்! மற்றதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்!!

த்தை வெட்டியவர்களிடம் கிட் வந்தான்.
என் பெயர் கிட்! மார்லினை உடனே பார்க்கவேண்டும்!
என்னை தேடியது நீதானா?
ராட்சதன் போல தெரிகிறானே!

மார்லின்! இவர் பெயர் கிட்! பெரிய கில்லாடி! உங்கள் கூட்டாளிக்குக் காயமாம். உங்களை பார்க்க வந்திருக்கிறார்.
ஓ! நீதா கிட்டா
அப்போது மார்லின் முகத்தில் கோபம் கொப்பளித்தது.
செல்சியா ஒரு வண்டியை அழைத்து வந்தாள். அதில் டொமினிக்கை ஏற்றினார்கள்.
டொமினிக்குக்கு மருத்துவம் செய்ய நகரத்துக்குக் கொண்டு போகிறோம்!
மிஸ்டர் கிட்! டொமினிக் எப்படி படுகாயம் அடைந்தா



ல்சியா! நீ டொமினிக்கை மருத்துவ னைக்குக் கொண்டுபோ! எனக்கு ங்கு சிறிது வேலை ருக்கிறது!!
அந்த காண்டாமிருகம் மார்லினுடன் சண்டை போடாதீர்கள்!
செல்சியாவின் வண்டி மறைந்ததும் தன் சுயரூபத்தை காட்டினான், கிட்!
நீதான் நியாயத்துக்கு போராடும் கிட்டா? என் நண்பன் மைக்கேலுக்கு நீதானே மரண தண்டனை வாங்கித் தந்தாய்?
கொலை செய்தால் தூக்குதான் கிடைக்கும்! பாராட்டு பத்திரமா தருவார்கள்?
என் நண்பனை சாகடித்த உன்னை பழிவாங்கியே தீருவேன்!
என்னிடமே மோதிப் பார்க்கிறாயா?

மார்லின் அடியாட்கள் கிட்டை சூழ்ந்துகொண்டனர்.
உன்னை பழிவாங்குவதற்கு நான் பயன்படுத்தும் முறையே வேறு!
என்னையும் மரத்தை விழச்செய்து கொலை செய்ய நினைக்கிறாயா?
இந்தமுறை நீ தப்பிக்க முடியாது! டொமினிக்கை நீ காப்பாற்றியது போல உனக்கு உதவ இங்கு யாரும் வரமாட்டார்கள்!!
கிட் சுதாரித்துகொண்டு துப்பாக்கிகளை எடுத்தான்.
எனக்கே கெடு விதிக்கிறாயா?

தே நேரம். அடியாள் ஒருவன்
மீது பாய்ந்தான்.
கிட்டை ஒழித்துகட்டு! முதலில் துப்பாக்கியைப் பிடுங்கு! அவனை கயிற்றில் கட்டு!!
என்னிடமே வாலாட்டுகிறாயா?
கிட்டை உடும்புப் பிடியாக பிடித்துக்கொண்டனர் அடியாட்கள்

டொமினிக்கிடம் செல்சியா...
நான் நகருக்குப் போய் செய்தி அனுப்ப ஆளை ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்!
கவனமாகப் போங்கள் மேடம்! கிட் வரும்வரை நான் இங்கேயே இருக்கிறேன்!!
சில மணி நேரம் கழித்
குதிரை சத்தம் கேட்கிறதே! நகரிலிருந்து தபால் வந்திருக்குமோ?
மார்லினுக்கு தபால் வந்திருக்கு!
அதை பிரித்துப் பார்த்த மார்லின்
என் எதிரி டொமினிக் எமலோகம் போய்விட்டான்!

எனக்கு இப்போது நல்ல நேரம். டொமினிக் இறந்ததால் இனி நான்தான் மரத்தொழிலுக்கு சக்கரவர்த்தி. கிட்டை ஒழிப்பதுதான் என் முதல் வேலை.
கிட்! இனி நீதான் என் எதிரி!!
இப்போது உன்னை பந்தாடப் போகிறேன்!
என் உடல் பலத்தின் மீது சந்தேகப்பட்டாயே! இதோ பார், என் திறமையை!!

இப்போது உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்! வா என் பின்னால்!! இந்த ஊரின் அழகை ரசிப்போம்!
அதே நேரம் — சிலர் குதிரையில் டொமினிக் இருப்பிடத்தைத் தேடி வந்தனர்.
வருவது யார்? என் எதிரிகள் யாரும் இருப்பார்களோ?
டொமினிக் தொலைநோக்கியில் பார்த்தான். செல்சியாவுடன் வீரர்கள் வருவதைக் கண்டு திருப்தியடைந்தான்.
அதே நேரம்— கிட்டை மலை உச்சிக்கு அழைத்து போனான், மார்லின்!

மலை உச்சியில் கிட்டுடன் மோத தயாரானான், மார்லின்.
என் நண்பன் மைக்கேலுக்கு தூக்குத் தண்டனை வாங்கித்தந்த உன்னை உயிரோடு விடக்கூடாது!
என்னை இங்கிருந்து தள்ளிவிட்டு கொலை செய்ய நினைக்கிறாயா?
இருவரும் அசுர வேகத்தில் மோதிக்கொண்டனர்.
கிட் முந்திக்கொண்டு உதை விட்டார்.
ஆ! அம்மா!

மார்லின் திருப்பித் தாக்க முயன்றபோது, கிட் விலகிக்கொண்டான்.
இந்தா இன்னும் ஒன்று!
மலை உச்சியிலிருந்து தலை குப்புற விழ இருந்த மார்லின்...
உதவி! என்னை காப்பாற்றுங்கள்!!
கிட் பாய்ந்து சென்று மார்லினை காப்பாற்றினான்.
உன்னை அணு அணுவாக சாகடிப்பேன்! இப்போது நீ உயிருடன் வேண்டும்!!

உன்னை தூக்கில் தொங்க விட்டால்தான் நீதி வெற்றி பெறும்.
திமிறி எழுந்த மார்லின், கிட்டை தாக்க தயாரானான்.
உன் எலும்பை ஒடிக்காமல் விடமாட்டேன்!
கிட்டை தன் இரும்பு கரத்தால் இருக்கி பிடித்தான், மார்லின்!
என்னை சக்கையாக்கி விடுவானோ?
சுதாரித்த கிட்...
மார்லின்! உன் தாடையை பெயர்க்கப் போகிறேன்!!
ஆ...

மார்லின் பிடியிலிருந்து முழுவதும் விடுபட்ட கிட்...
இந்தா என் திறமையைப் பார்!
அப்போது கிட் பாய்ந்து வந்து அடியாளிடம் இருந்த துப்பாக்கியை பறித்தான்.
நம் தலைவரை மயக்கமாக்கி விட்டானே!
மயங்கி விழுந்த மார்லினை அடியாட்கள் சூழ்ந்துகொண்டனர்.

எல்லோரும் பாய்ந்து போய் கிட்டை பிடிப்போம்! அவனை உயிரோடு கீழே தள்ளினாலும் சரி!!


திரும்பி கீழே பார்த்த கிட் அதிர்ந்தான்.
இவர்களிடமிருந்து தப்பிக்க இதுதான் சரியான யோசனை!

தானாகவே கிட் கீழே விழுந்தான்!
ஆ! செத்தேன்!!
மரக்கிளையை கிட் பற்றிக்கொண்டான்!
நம் எதிரி ஒழிந்தான்! வாருங்கள் போகலாம்!!

அவர்கள் போனதும் கிட் மெல்ல மேலே ஏறினான்.
எதிரிகள் போய்விட்டார்கள்!

குதிரை அருகே கிட் வந்தான்!
கவலைப்படாதே டைகர்! என்னை அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது!!

இனிமேல் மார்லினுக்கு சமாதி கட்டிவிட வேண்டியதுதான்!
இரவில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான் மார்லின்!
நடு இரவில் மார்லின் வீட்டுக் கதவை சிலர் தட்டினார்கள்.
மார்லின்! எழுந்திரு!!
திடீரென்று தூக்கத்தில் இருந்து மார்லின் விழித்தான்.

இறந்து போன டொமினிக்கின் ஆவி அங்கு வந்தது. அதை பார்த்த மார்லின் மரண பயத்தில் இருந்தான்!
கொலைகாரப் பாவி! உன்னை பழி தீர்க்கவே வந்திருக்கிறேன்!! வா என்னோடு!
என்னை விட்டுவிடு! நான் தெரியாமல் கொலை செய்துவிட்டேன்!!
உண்மையை சொல்லிவிடு! என்னை கொலை செய்தது மட்டும் இல்லாமல் மக்கள் தொண்டன் கிட்டையும் கொலை செய்துவிட்டாயே?
ஆம்...! நான்தான் இருவரையும் கொன்றேன்!! என்னை விட்டுவிடு டொமினிக்!!

அதே விநாடி நகர செரீப்பும்
டொமினிக் நன்றாக நடித்து அவனை மாட்டிவிட்டீர்கள்!
ஆ! என்னையே ஏமாற்றிவிட்டானே!
மார்லின் எழுந்து டொமினிக்கை தலைக்கு மேல் தூக்கி பந்தாடினான்.
ஆ! என் எலும்பு போச்சே!
அவனை உயிரோடு பிடியுங்கள்!

டொமினிக்கை தூக்கி செரீப்பின் உதவியாளர்கள் மீது வீசினான்!
அய்யோ! அம்மா!!
எதிர்பாராத நேரத்தில் கண்ணாடியை உடைத்துக்கொண்டு வெளியே பாய்ந்தான், மார்லின்!
சலீர்!
அவனை விரட்டி பிடியுங்கள்! தப்பிவிட போகிறான்!!

மரண பயத்தில் ஓடிக்கொண்டிருந்த மார்லின் முன்பு கிட்டின் குதிரை பாய்ந்து வந்தது!
ஆ! அவன் கிட் அல்லவா?
நீ எப்படி உயிரோடு?
செத்திருப்பேன் என்று நினைத்தாயா? நான் கில்லாடிக்கு கில்லாடி!!
இப்போது நீ தப்பிவிட முடியாது!
இப்போது என் உடல் பலத்தை பார்க்கிறாயா?

அப்போது கிட்டின் குதிரை மார்வினை எட்டி உதைத்தது!
அய்யோ! செத்தேன்!!
அப்போது செல்சியா, செரீப்பின் உதவியாளர்களுடன் அங்கு வந்தாள்.
ராட்சதனின் கொட்டம் இனி அடங்கிவிடும்!
மார்வின் போட்ட ஆட்டம் இதோடு முடிந்தது! இனி இந்த நகரம் நிம்மதியாக இருக்கும்!! இவனுக்கு மரண தண்டனை வாங்கி தரவேண்டும்!
(முடிந்தது)

அடுத்த காமிக்ஸ்

மர்ம வீரன்

சிங்கன்

அதிரடித் தாக்குதல்!

கடல் கொள்ளைக்காரி

வண்ணப் படக்கதை

தங்கக்கோவிலைக்
கொள்ளையடிக்கத்
துடிக்கும்
கடல் கொள்ளையர்!
சிங்கன் முறியடித்தது
எப்படி?

நவம்பர் 16-ந்தேதி
"ராணி காமிக்ஸ்" பாருங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)
November 1, 2004.
of India under No. 42576/84